தமிழகத்தில் இருந்து வெளிமாநிலங்களுக்கு செல்லும் ஜவுளி நிறுவனங்கள்

தொழில் துறையை படுபாதாளத்திற்கு தள்ளிய தி.மு.க. அரசு

எடப்பாடி பழனிசாமி கடும் கண்டனம்

சென்னை, ஆக.6– தமிழக ஜவுளி நிறுவனங்கள் அண்டை மாநிலங்களில் தொழில் முதலீடுகளை செய்யும் அளவிற்கு தமிழக தொழில் துறையை படுபாதாளத்திற்கு தி.மு.க. அரசு தள்ளி விட்டது என எடப்பாடி பழனிசாமி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அண்ணா தி.மு.க. பொதுச்செயலாளரும், முன்னாள் முதலமைச்சருமான எடப்பாடி பழனிசாமி இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

ஆட்சிக்கு வந்து 38 மாதங்களில் குடும்பத்துடன் ஐக்கிய அரேபிய நாடுகள் பயணம், பிறகு சிங்கப்பூர் சுற்றுப் பயணம்; 2024–ம் ஆண்டு ஜனவரி 7, 8 ஆகிய நாட்களில் உலக முதலீட்டாளர்கள் மாநாடு; பிறகு ஜனவரி 27–ல் ஸ்பெயினுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு அன்னிய முதலீடுகள் ஈர்ப்பில் தமிழகத்தை பின்னுக்கு தள்ளியதில்தான் தி.மு.க. அரசு சாதனை புரிந்துள்ளது.

குறிப்பாக, தொழில் முதலீட்டை ஈர்ப்பதற்கான அரசுமுறைப் பயணமாக 27.1.2024 அன்று ஸ்பெயினுக்குச் சென்றபோது 3,440 கோடி ரூபாய் முதலீட்டிற்கான உடன்பாடுகள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்த நிலையில், உடன்பாடு ஏற்பட்டுள்ள ஒருசில நிறுவனங்களில், 2 நிறுவனங்களின் அலுவலகங்கள் சென்னை மற்றும் பெருந்துறையில் உள்ளன என்று செய்திகள் வந்துள்ளன.

வெள்ளை அறிக்கை எங்கே?

'அம்மாவின் ஆட்சியில் 2020–2021ல் அன்னிய நேரடி முதலீடுகளை ஈர்த்தலில் 3–வது இடத்தில் இருந்த தமிழகத்தை, 2022–23ல் 27.70 சதவீதம் குறைவாக அன்னிய முதலீட்டை ஈர்த்து, 8–வது இடத்திற்கு பின்னுக்குத் தள்ளியதுதான் முதலமைச்சரின் சாதனை' என்று சரியாக ஓராண்டிற்கு முன், அதாவது ஆகஸ்ட் 2023 அன்று நான் அறிக்கை மற்றும் பேட்டிகள் வாயிலாக தெரிவித்திருந்தேன்.

இதுகுறித்து வெள்ளை அறிக்கையும் வெளியிட வேண்டும் என்று முதலமைச்சர் ஸ்டாலினை வலியுறுத்தி இருந்தேன். ஆனால், தி.மு.க. அரசு வெள்ளை அறிக்கை எதையும் வெளியிடவில்லை.

38 மாதம் செய்தது என்ன?

செமி கண்டக்டர் தயாரிப்பில் சீனா மற்றும் தைவான் நாடுகள் முக்கிய இடத்தைப் பிடித்துள்ள நிலையில், இந்தியாவில் செமி கண்டக்டர் தயாரிப்பதற்கான தொழிற்சாலைகள் அமைப்பதற்கான முன்னெடுப்புகளை மத்திய அரசு ஊக்குவித்தபோது, எனது தலைமையிலான அம்மாவின் அரசு திருநெல்வேலி மாவட்டத்தில் நாங்குநேரி மற்றும் ஒசூரில் செமிகண்டக்டர் பூங்கா அமைப்பதற்கான நடவடிக்கைளை மேற்கொண்டோம். ஆனால், ஆட்சிக்கு வந்து 38 மாதங்கள் கடந்துவிட்ட நிலையில், தி.மு.க. அரசு இதில் முனைப்பு காட்டாததன் காரணமாக செமி கண்டக்டர் தொழிற்சாலைகள் அசாம் மற்றும் உத்தரப் பிரதேச மாநிலங்களுக்குச் சென்றுவிட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

தி.மு.க. அரசின் கையை விட்டு வெளிநாட்டு முதலீடுகள்தான் வெளி மாநிலங்களுக்குச் செல்கிறது என்ற நிலையில், கடந்த ஜூலை மாதம் கடைசி வாரத்தில் மத்தியப்பிரதேச முதலமைச்சர், கோவை மற்றும் திருப்பூருக்கு நேரடியாக வருகை தந்து, திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கம், தென்னிந்திய ஆலைகள் சங்கம் (சிமா) மற்றும் இந்திய பருத்தி கூட்டமைப்பு ஆகியவற்றுடன் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளார். இதனால், உள் மாநில ஜவுளி முதலீடுகள் வெளி மாநிலங்களுக்குச் செல்லும் நிலையை தி.மு.க. அரசு ஏற்படுத்தியுள்ளது.

வெளிமாநிலம் செல்வது ஏன்?

மேற்படி ஒப்பந்தங்களின்படி, மத்தியப் பிரதேசத்தில் பருத்தி வளர்ச்சி வாரியத்தை நிறுவிடவும், எக்ஸ்ட்ரா லாங் ஸ்டேபிள் பருத்தி உற்பத்தி மற்றும் பரப்பளவை அதிகரிக்கவும், மத்தியப் பிரதேசத்தின் ஆடைத் தொழிலுக்கான முதலீட்டு வாய்ப்புகளை ஊக்குவிப்பதோடு, ஆடை உற்பத்தி நிறுவனங்களின் வளர்ச்சியை எளிதாக்கவும், திறன் மேம்பாடு வசதிகளில் ஆலோசனை வழங்கவும், ஆடை கிளஸ்டர் வடிவமைப்பிற்கான ஊக்கம் அளிப்பது உள்ளிட்ட பல்வேறு அம்சங்களில் தென்னிந்திய ஆலைகள் சங்கம் மற்றும் இந்திய பருத்தி கூட்டமைப்பு உடன் இணைந்து செயல்படும் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

தமிழக ஜவுளி கூட்டமைப்பு தனது விரிவாக்கப் பணிகளை வெளி மாநிலங்களுக்கு மாற்றுவதற்கு ஒருசில முக்கியக் காரணங்கள் இருப்பதாகத் தெரிவிக்கின்றனர். அதன் விபரம்:

★ தி.மு.க. அரசு பொறுப்பேற்றதில் இருந்து தொழில் நிறுவனங்களுக்கு மூன்று முறை கடுமையாக மின் கட்டணங்களை உயர்த்தியதுடன், பீக் ஹவர் கட்டண உயர்வு, நிலை கட்டணம் உயர்வு;

★ 365 கிலோ பருத்தி பேலின் விலை 50 சதவீதத்திற்கும் கீழே குறைந்த போதும், நூல் விலையில் ஸ்திரமற்ற தன்மை நிலவிய போதும், போதிய தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளாதது.

வெளிநாடுகளில் இருந்து முதலீட்டினை ஈர்க்கிறோம்' என்று தம்பட்டம் அடித்துக்கொள்ளும் தி.மு.க. அரசு, இனியாவது கும்பகர்ண தூக்கத்தில் இருந்து விழித்து, முதலில் தமிழகத்தில் இருந்து வெளி மாநிலங்களுக்குச் செல்லும் தமிழக தொழில் நிறுவனங்கள், இங்கேயே தொழில் துவங்குவதற்குத் தேவையான சூழ்நிலையை உருவாக்குவதோடு; தென்னிந்தியாவின் மான்செஸ்டர் கோயம்புத்தூர்' என்ற பெயரை தொடர்ந்து தக்கவைத்துக் கொள்ளும் வகையில் டெக்ஸ்டைல் துறையினைக் காப்பாற்ற நடவடிக்கை எடுக்குமாறும் வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

அண்ணா தி.மு.க. முன்னாள் அவை தலைவரும், முன்னாள் அமைச்சருமான இ. மதுசூதனனின் 3வது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அவரது திருவுருவப்படத்திற்கு வடசென்னை வடக்கு கிழக்கு மாவட்ட கழக செயலாளர் ஆர்.எஸ். ராஜேஷ் மலர்தூவி மரியாதை செலுத்தி 300 ஏழை பெண்களுக்கு புடவை மற்றும் 500 பேருக்கு அன்னதானம் வழங்கினார். இதில் பகுதி செயலாளர்கள் எம்.என். சீனிவாசபாலாஜி, ஆர்.நித்தியானந்தம், டி.ஒய்கே.செந்தில்குமார், என்.எம். பாஸ்கரன், மணல் ரவிசந்திரன், மாவட்ட பொருளாளர் ஏ.கணேசன், மற்றும், லட்சுமி சிவகுமார், ஐயப்பா எஸ்.வெங்கடேசன், டி.சரவணன், டி.டீ.ஜனார்த்தனன், எஸ். முத்து செல்வம், பவானி வெங்கடேசன், தி.நகர் கே. பிரசன்னகுமார், லயன் ஈ.சண்முகவினாயகம், எஸ். சுயம்பு, சு.பிரசாத், சென்னை பி.கணேசன், ஜெசிபிஎஸ்.சுரேஷ், டி.ஹரிதாஸ், எஸ்.ஆர்.அன்பு, ஏ.வினாயகமூர்த்தி, ஏ. கே. சந்திரசேகர், நாகூர் மீரான், டி.தயாளன், மரக்கடை விஜி, இபி.சேகர், ஆர்.வேல்முருகன், பி.கோவிந்தராஜ், எல்.எஸ். மகேஷ்குமார், வி.எஸ். புருஷோத்தமன், ஆர்.சிவகுமார், கே.எஸ். மூர்த்தி, சந்தனசிவா, எம். மாலா, கே.பி.கர்ணன், எம். ஹரிகிருஷ்ணன், லயன் ஜி.குமார், வி.கோபிநாத், இரா.ஜெய்பால், பெரம்பூர் எம்.சேகர், பா.இளங்கோவன், ஏ.ஆனந்த், ஜம்புலி வி.பாலாஜி, டி.வெங்கடேசன், வி.பொன்முடி, எம். மகேந்திரமணி, சியான் செந்தில், எஸ்.பி.பி.பிரேம்குமார், இ.எம்.எஸ். நிர்மல் குமார், ஏ.இளவரசன், டி.பிரபாகரன், தங்கதுரை, புலிமுருகன், கார்த்திக், ரவிந்திரநாத், கிண்டி ராமு, பாபு, இ. சந்தோஷ்குமார், மற்றும் ஆர்.கே.நகர் பெரம்பூர் பகுதி வட்ட பிற அணி நிர்வாகிகள் மகளிர் அணியினர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

யூடியூபர் பெலிக்ஸ் ஜெரால்டு ஜாமீனில் விடுதலை

திருச்சி, ஆக. 6– சவுக்கு சங்கரின் பேட்டியை ஒளிபரப்பிய ரெட்பிக்ஸ் யூடியூப் சேனலின் நிர்வாகி பெலிக்ஸ் ஜெரால்டு ஜாமீனில் விடுவிக்கப்பட்டார்.

பெண் காவலர்கள் குறித்த அவதூறு செய்தியை ஒளிபரப்பிய புகாரில், சவுக்கு சங்கரின் பேட்டியை ஒளிபரப்பு செய்த யூடியூபர் பெலிக்ஸ் ஜெரால்டை கடந்த மே மாதம் 10ம் தேதி இரவு டில்லியில் திருச்சி தனிப்படை போலீசார் கைது செய்தனர். பின்னர், திருச்சி கூடுதல் மகிளா நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு அவர் சிறையில் அடைக்கப்பட்டார். பெலிக்ஸ் ஜெரால்டு மீது கோவை போலீஸாரும் வழக்குப் பதிவு செய்திருந்தனர்.

இந்த நிலையில் திருச்சி கூடுதல் மகிளா நீதிமன்றத்தில் இவருக்கு கடந்த மே 22ம் தேதி ஜாமீன் வழங்கப்பட்டது. அதேசமயம் கோயம்புத்தூர் நீதிமன்றத்தில் இவரது ஜாமீன் மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

இதையடுத்து சென்னை ஐகோர்ட்டில் ஜாமீன் கேட்டு அப்பீல் செய்திருந்தார் பெலிக்ஸ். அவரது அப்பீல் மனுவை விசாரித்த சென்னை ஐகோர்ட், கோவை டவுன்ஹால் காவல் நிலையத்தில் வாரந்தோறும் செவ்வாய்க்கிழமை கையெழுத்திட வேண்டும் என்ற நிபந்தனையுடன் அவருக்கு ஜாமீன் வழங்கியது. கோவை, திருச்சி ஆகிய வழக்குகளில் ஜாமீன் கிடைத்ததை அடுத்து, திருச்சி மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருந்த பெலிக்ஸ் ஜெரால்டு இன்று காலையில் ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டார்.

'டெட்' தேர்ச்சி பெற்றவர்களுக்கு பணி நியமன ஆணை வழங்க வேண்டும்: பிரேமலதா விஜயகாந்த் வலியுறுத்தல்

சென்னை, ஆக. 6– 'டெட்' தேர்ச்சி பெற்றவர்களுக்கு பணி நியமன ஆணை வழங்க வேண்டும் என்று பிரேமலதா விஜயகாந்த் வலியுறுத்தி உள்ளார்.

தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:

கடந்த 2013ம் ஆண்டு நடைபெற்ற ஆசிரியர் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற்று, கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக பணி நியமனம் செய்யப்படாமல் இருக்கும், சுமார் 40 ஆயிரம் பட்டதாரி ஆசிரியர்கள் தமிழக அரசின் கவனத்தை ஈர்க்க பல்வேறு தொடர் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். 2013ம் ஆண்டு ஆசிரியர் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற்ற தங்களை 2018ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட நியமனத் தேர்வின்றி பணி நியமனம் செய்ய வேண்டும் என்ற பட்டதாரி ஆசிரியர்களின் கோரிக்கைக்கு, தி.மு.க. அரசு செவி சாய்க்காத நிலையில், நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்த 410 ஆசிரியர்களுக்கு பணி நியமன ஆணை வழங்க வேண்டும் என ஆசிரியர் தேர்வு வாரியத்திற்கும், தமிழக அரசுக்கும் சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மேலும் 2018ம் ஆண்டுக்கு முன்பாக பின்பற்றப்பட்ட ஆசிரியர் நியமன நடைமுறையின் படியே, அப்போது நடைபெற்ற தகுதித்தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு விரைந்து பணி வழங்க வேண்டும் என்ற நீதிமன்ற உத்தரவை பின்பற்றி வழக்கு தொடுத்தவர்கள் மட்டுமல்லாது, அனைவருக்கும் பணி நியமனம் வழங்கப்பட வேண்டும் என பட்டதாரி ஆசிரியர்கள் திருச்சியில் மாவட்ட கலெக்டர் அலுவலகம் எதிரில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

எனவே, தங்களின் பணிக்காலத்தின், பாதி காலத்தை போராட்டங்களிலேயே கழித்திருக்கும் பட்டதாரி ஆசிரியர்களின் கோரிக்கையை ஏற்று, 2013ம் ஆண்டு நடைபெற்ற ஆசிரியர் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற்று, கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக காத்திருக்கும் அனைவருக்கும் உடனடியாக பரிசீலனை செய்து பணி நியமன ஆணைகளை வழங்குமாறு ஆசிரியர் தேர்வு வாரியத்தையும், தமிழக அரசையும் கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தாம்பரம் தொகுதி அண்ணா தி.மு.க. தகவல் தொழில்நுட்ப பிரிவு ஆலோசனைக் கூட்டம்

மாவட்டச் செயலாளர் சிட்லபாக்கம் ராசேந்திரன் பங்கேற்பு

தாம்பரம், ஆக. 5 செங்கல்பட்டு மேற்கு மாவட்டம், தாம்பரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவு நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட கழக செயலாளர் சிட்லபாக்கம் ச. இராசேந்திரன் தலைமையில் நடைபெற்றது. அண்ணா தி.மு.க தகவல் தொழில்நுட்பப் பிரிவு இணைச் செயலாளர் சி.டி.ஆர். நிர்மல்குமார் சிறப்பு விருந்தினராக பங்கேற்று நிர்வாகிகளுக்கு ஆலோசனைகளை வழங்கினார்.

கூட்டத்தில் அனைத்துலக எம்.ஜி.ஆர். மன்றத் தலைவர் முன்னாள் அமைச்சர் டி.கே.எம். சின்னையா முன்னிலை வகித்தார். மாவட்ட தகவல் தொழில்நுட்பப் பிரிவுச் செயலாளர் பா.காசிராஜன் வரவேற்புரையாற்றினார்.

தகவல் தொழில்நுட்பப் பிரிவு இணைச் செயலாளர் சி.டி.ஆர். நிர்மல் குமார் ஆலோசனை வழங்கி பேசியதாவது:

வளர்ந்து வரும் தகவல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சிக்கேற்ப தங்களை தகவமைத்துக் கொள்வது ஒவ்வொரு அரசியல் கட்சியின் இன்றியமையாத தேவையாகும். இதனை உணர்ந்து நமது கழக பொதுச் செயலாளர் எடப்பாடி கே. பழனிசாமி கழக தகவல் தொழில்நுட்ப பிரிவை உருவாக்கினார். நமது நிர்வாகிகளும் கழக வளர்ச்சிக்கு இன்றளவும் சிறந்த பங்களிப்பை அளித்து வருகின்றோம். இது மேலும் வளர்ச்சி அடைய நாம் அனைவரும் கடுமையாக உழைக்க வேண்டும்.

நம் கழக ஆட்சியில் கொண்டுவரப்பட்ட மக்கள் நல திட்டங்களை நாம் ஒவ்வொருவர் இடத்திலும் எடுத்து செல்வதுடன், தற்போதைய ஆட்சியில் நிலவும் மக்கள் பிரச்சனைகளையும், சமூக அவலங்களையும் பொது வெளியில் கொண்டுவர தகவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்த வேண்டும். தமிழகத்தில் மீண்டும் நமது கழகத்தின் நல்லாட்சி அமைய நீங்கள் அனைவரும் கடுமையாக உழைத்து தங்கள் பங்களிப்பை வழங்க வேண்டும்.இவ்வாறு அவர் பேசினார்.

கூட்டத்தில் முன்னாள் ஒன்றியக் குழுத் தலைவர் என்.சி.கிருஷ்ணன், பகுதி கழகச் செயலாளர்கள் எம். தேவேந்திரன், எல்லார் செழியன், எம்.கூத்தன், ஏ.கோபிநாதன், இரா. மோகன், மாவட்ட எம்.ஜி.ஆர் இளைஞர் அணி செயலாளர் ஜி.எஸ். புருஷோத்தமன், மற்றும் மாவட்ட தகவல் தொழில்நுட்பப் பிரிவு நிர்வாகிகள் எஸ்.சக்திகுமரன், ஏ.ஆர்.ராஜசுந்தரன், எம்.விக்னேஷ், டி.பிரசாந்த், எஸ்.செந்தில்குமார், எஸ்.விமல் குமார், வி.சிவக்குமார், ஆர்.ரவிச்சந்திரன், ஏ.எஸ்.பத்மநாபன் கலந்து கொண்டனர். கூட்ட முடிவில் மாவட்ட தகவல் தொழில்நுட்பப் பிரிவு துணைச் செயலாளர் பி.ஜி. ராஜ்குமார் நன்றியுரையாற்றினார்.

பெயர் மாற்றம்

ANANDHA KUMAR .M, தந்தை பெயர்: Muthaiah.M, பிறந்த தேதி: 21.03.1997, நெ.26/83, கண்ணகி தெரு, நேரு நகர், வேளச்சேரி, சென்னை – 600 042, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **ANANTHA KUMAR. M** என்று அழைக்கப்படுகிறேன்.

ANANDHA KUMAR.M

பெயர் மாற்றம்

MANISHA BHARAT KUMAR PUROHIT, கணவர் பெயர்: Bharat Purohit, பிறந்த தேதி: 08.08.1966, நெ.364/6, swastik apts, 2வது மாடி, 4வது மெயின் ரோடு, எம்.கே.பி. நகர், வியாசர்பாடி, சென்னை – 600039. என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **MANISHA BHARAT PUROHIT** என்று அழைக்கப்படுகிறேன்.

MANISHA BHARAT KUMAR PUROHIT

பெயர் மாற்றம்

MOHAMMED YOUSUF YASIN, தந்தை பெயர்: MOHAMED YAKOOB, பிறந்த தேதி: 26.07.1964, நெ.03/172, காயிதே மில்லத் தெரு, திருமுல்லைவாசல், அஞ்சல் சீர்காழி தாலுக்கா, நாகப்பட்டினம் மாவட்டம் –609113. என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **MOHAMMED YOUSUF MOHAMED YAKOOB** என்று அழைக்கப்படுகிறேன்.

MOHAMMED YOUSUF YASIN

பெயர் மாற்றம்

R.S.TEJESHWARAN, தந்தை பெயர்: K.Ramesh, பிறந்த தேதி: 06.07.2006, ப.நெ. 2, பு.நெ.5, **கிருஷ்ணமா சந்து, நுங்கம்பாக்கம்,** சென்னை–600 034. என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **R.S.TEJESHWAR** என்று அழைக்கப்படுகிறேன்.

R.S.TEJESHWARAN

பெயர் மாற்றம்

HARINY PRASAD GOPI JANARDHAN, தந்தை பெயர்: Gopi Janardhan, பிறந்த தேதி: 27.09.2005, நெ.4/609, முகப்பேர் கிழக்கு, சென்னை–600 037. என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **New Given Name: HARINY New SURNAME: PRASAD** என்று அழைக்கப்படுகிறேன்.

HARINY PRASAD GOPI JANARDHAN

பெயர் மாற்றம்

Old Given Name: SARABOJI RAO SARAVANAN, தந்தை பெயர்: SARABOJI RAO, பிறந்த தேதி: 20.01.1978, பிளாக் CW NO.203/204, KEN NARINYAS, தர்கா ரோடு, ஜமின் பல்லாவரம், சென்னை–600 043. என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **New surname: SARABOJI RAO New Given Name: SARAVANAN** என்று அழைக்கப்படுகிறேன்.

Old Given Name: SARABOJI RAO SARAVANAN

பெயர் மாற்றம்

ADAM DANISH AHAMED, பிறந்த தேதி: 14.10.2013, நெ.401, 7வது தெரு, சாஸ்த்திரி நகர், வியாசர்பாடி, சென்னை – 600039. என்ற முகவரியில் வசிக்கும் எனது மகன் இனி **ADAM DENNIS** என்று அழைக்கப்படுகிறார்.

DENNIS JOSEPH
தந்தை

பெயர் மாற்றம்

Old Given Name: DHANDABANI Old Surname: KRISHNAN, தந்தை பெயர்: KRISHNAN, பிறந்த தேதி: 11.04.1970, நெ. 31/12, அண்ணா தெரு, பாரதியார் நகர், கோயம்பேடு, –சென்னை–600 107. என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **New Given name: DHANDAPANI New surname: KRISHNAN** என்று அழைக்கப்படுகிறேன்.

Old Given Name: DHANDABANI Old Surname: KRISHNAN

அபிராமி பைனான்ஷியல் சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட்

பதிவு அலுவலகம் : பழைய எண்.11, புதிய எண்.2, பார்த்தசாரதிபுரம், 2வது தெரு, தி. நகர், சென்னை – 600 017.
Phone No. 044-4953 0954 | E-Mail ID: abicompliance@afslindia.in | website: www.afslindia.in | CIN: L65993TN1993PLC024861

30 ஜூன், 2024ல் முடிந்த காலாண்டிற்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள்

(ரூ. லட்சத்தில்)

விவரங்கள்	முடிந்த காலாண்டு			முடிந்த ஆண்டு
	30.06.2024 (தணிக்கை செய்யாதது)	31.03.2024 (தணிக்கை செய்தது)	30.06.2023 (தணிக்கை செய்யாதது)	31.03.2024 (தணிக்கை செய்தது)
1. (a) செயல்பாடுகள் மூலம் வருமானம்	-	-	-	-
2. (a) இதர வருமானம்	43.62	58.01	32.20	183.13
3. மொத்த வருமானம் (1+2)	43.62	58.01	32.20	183.13
4. செலவினம்	-	-	-	-
மூலதனப் பொருட்கள் உபயோக செலவு	-	-	-	-
வர்த்தகத்தில் பங்கு கொள்முதல்	-	-	-	-
மூலப்பொருளின் சரக்குகளில் மாற்றங்கள்	-	-	-	-
ஊழியர் செலவினம்	5.31	8.54	4.32	26.60
நிதி செலவுகள்	0.42	0.00	0.00	1.25
தேய்மானம்	0.09	0.20	0.20	0.79
இதர செலவினம்	8.25	8.61	9.83	45.32
மொத்த செலவுகள்	14.08	17.35	14.35	73.96
5. வரி மற்றும் விலக்கு அயிட்டங்களுக்கு முன் லாபம்/(நஷ்டம் (3 - 4)	29.54	40.66	17.85	109.16
6. விலக்கு அயிட்டங்கள்	-	-	-	-
7. வரிக்கு முன் முன் லாபம்/(நஷ்டம் (5 - 6)	29.54	40.66	17.85	109.16
8. வரி செலவுகள்				
நடப்பு வரி	7.25	15.49	1.00	29.69
ஒத்திவைக்கப்பட்ட வரி	-	-	-	(65.67)
மொத்த வரி செலவுகள்	7.25	15.49	1.00	(35.98)
9. காலத்திற்கான தொடரும் செயல்பாடுகளில் இருந்து லாபம்/(நஷ்டம்) (7 - 8)	22.29	25.17	16.85	145.14
10. நிறுத்தப்பட்ட செயல்பாடுகளில் இருந்து லாபம்/(நஷ்டம்)	-	-	-	-
11. நிறுத்தப்பட்ட செயல்பாடுகளுக்கான வரி செலவுகள்	-	-	-	-
12. நிறுத்தப்பட்ட செயல்பாடுகளில் இருந்து லாபம்/(நஷ்டம்)(வரிக்கு பின்) (10-11)	-	-	-	-
13. காலத்திற்கான லாபம்/(நஷ்டம்) (9+12)	22.29	25.17	16.85	145.14
14. இதர விரிவான வருமானம், நிகர வருமான வரி	-	-	-	-
a(i) லாபம் அல்லது நஷ்டத்திற்கு மறுவகைப்படுத்தப்படாத பொருட்கள்	-	-	-	-
(ii) பொருட்கள் தொடர்பான வருமான வரி, அது லாபம் அல்லது நஷ்டத்திற்கு மறுவகைப்படுத்தப்படாதது	-	-	-	-
b(i) லாபம் அல்லது நஷ்டத்திற்கு மறுவகைப்படுத்தப்படாத பொருட்கள்	-	-	-	-
(ii)பொருட்கள் தொடர்பான வருமான வரி, அது லாபம் அல்லது நஷ்டத்திற்கு மறுவகைப்படுத்தப்படாதது	-	-	-	-
மொத்த இதர விரிவான வருமானம், நிகர வருமான வரி	-	-	-	-
15. மொத்த இதர விரிவான வருமானம்/(நஷ்டம்), நிகர வருமான வரி (13+14)	22.29	25.17	16.85	145.14
16. செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம் (முகமதிப்பு: ஒவ்வொன்றும் ரூ.10/-)	540.00	540.00	540.00	540.00
17. ஒரு பங்கு சம்பாத்தியம் (ரூ.)(வருடாந்திரம் அல்ல) அடிப்படை பலமிழந்தது				

குறிப்பு:
1. 30 ஜூன் 2024ல் முடிந்த காலாண்டிற்கான மேற்கண்ட நிதிநிலை முடிவுகள் தணிக்கை குழுவால் மறுபரிசீலனை செய்யப்பட்டு 05 ஆகஸ்ட், 2024 அன்று நடைபெற்ற இயக்குனர்கள் குழு கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டது.
2 30 ஜூன் 2024ல் முடிந்த காலாண்டிற்கான நிதிநிலை முடிவுகள் தொடர்பாக சட்ட தணிக்கையாளர்களால் வழங்கப்பட்ட குறுகிய மறுபரிசீலனை அறிக்கை 05 ஆகஸ்ட், 2024 அன்று நடைபெற்ற இயக்குனர்கள் குழு கூட்டத்தில் பதிவு செய்யப்பட்டது.
3. எங்கெல்லாம் தேவையோ அங்கெல்லாம் கணக்குகள் ரீகரூப் செய்யப்பட்டு மறுவகைப்படுத்தப்பட்டுள்ளது.
4. முதலீட்டாளர்கள் புகார் : காலாண்டு துவக்கத்தில் நிலுவை - இல்லை. காலாண்டில் பெறப்பட்ட மற்றும் நிவர்த்தி செய்யப்பட்ட புகார்கள் - இல்லை. காலாண்டு முடிவில் நிலுவையில் உள்ள புகார்கள் - இல்லை.
5. தனியான ஆஸ்திகள் மற்றும் பொறுப்புகள் அறிக்கை

(ரூ. லட்சத்தில்)

விவரங்கள்	30 ஜூன், 2024 அன்று	30 ஜூன், 2023 அன்று	31 மார்ச், 2024 அன்று
ஆஸ்திகள்			
நடப்பு அல்லாத ஆஸ்திகள்			
சொத்து, ஆலை மற்றும் கருவிகள்	0.6	1.33	0.73
முதலீடுகள்	93.7	65.34	89.34
இதர நடப்பு அல்லாத ஆஸ்திகள்	4.5	13.99	1.69
	98.9	80.66	91.76
நடப்பு ஆஸ்திகள்			
ரொக்கம் மற்றும் ரொக்கத்திற்கு இணையானது	1,961.2	1,909.86	1,887.02
இதர நடப்பு ஆஸ்திகள்	74.6	457.08	127.69
	2,035.8	2,366.93	2,014.72
மொத்தம் - ஆஸ்திகள்	**2,134.6**	**2,447.59**	**2,106.48**
சம மற்றும் பொறுப்புகள்			
சமம்			
பங்கு மூலதனம்	540.0	540.00	540.00
இதர சமம்	1,543.4	1,500.82	1,521.12
	2,083.4	2,040.82	2,061.12
நடப்பு அல்லாத பொறுப்புகள்			
கடன்கள்	-	-	-
நடப்பு பொறுப்புகள்			
இதர நடப்பு ஆஸ்திகள்	14.3	5.49	15.67
ஒதுக்கீடுகள்	36.9	401.28	29.69
	51.2	406.77	45.36
மொத்த சம மற்றும் பொறுப்புகள்	**2,134.6**	**2,447.59**	**2,106.48**

6. **நிகர லாப நல்லிணக்கம்**
முந்தைய இந்திய ஜிஏஏபிக்கு இணங்க மொத்த நிகர லாபத்தை சமரசம் செய்ததன் மூலம், செபிக்குத் தேவையான முந்தைய ஆண்டின் காலாண்டில் இந்த ஏஎஸ்க்கு இணங்க மொத்த விரிவான வருமானம் வழங்கப்பட்டுள்ளது:

(ரூ. லட்சத்தில்)

விவரங்கள்	தனியானது		
	தணிக்கை செய்யாதது		தணிக்கை செய்தது
	30.06.2024 முடிந்த காலாண்டு	30.06.2023 முடிந்த காலாண்டு	31.03.2024 முடிந்த ஆண்டு
ஜிஏஏபி-ன் படி காலத்திற்கான நிகர லாபம்	22.3	16.85	145.14
கழிக்க :			
இதர விரிவான வருமானத்தில் இயல்பான லாபம்/(நஷ்டம்)			
இந்த் ஏஎஸ்-ன் கீழ் நிகர லாபம் (A)	**22.3**	**16.85**	**145.14**
இதர விரிவான வருமானம்			
வாங்குதல் தொடர்பான பரிவர்த்தனை செலவு ★	-	-	-
இதர விரிவான வருமானம் (B)	-	-	-
இந்த் ஏஎஸ்-ன் கீழ் காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (A+B)	**22.3**	**16.85**	**145.14**

அபிராமி பைனான்ஷியல் சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட்
சித்ரா சிவராமகிருஷ்ணன்
முழு நேர இயக்குனர் (DIN: 00292725)

இடம் : சென்னை
தேதி : 05 ஆகஸ்ட், 2024